[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 26

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பின ரவர்கள் பொதுப்படையாகக் கேட்டிருக்கிற அந்தக் கேள்விக்கு, இருக்கிற சூழ்நிலைகள் இங்கே விளக்க அறிக்கையாகத் தரப் பட்டிருக்கிறது. இந்த விளக்க அறிக்கையைப் பொறுத்துத்தான் நாம் இங்கே கருத்துக்களை எடுத்துத் தெரிவிக்க முடியும். அவர் கள் விளக்க அறிக்கையை வைத்துக்கொண்டு, இதிலே சொல்லப் பட்டிருப்பது தவறாக இருந்தாலும் சரி, அல்லது அவர்களிடத்தில் இருக்கும் குறிப்புகள் இதில் சொல்லப்படாமல் இருந்தாலும் சரி, அவற்றை எல்லாம் சேர்த்து, 2, 3 நாட்களில் எனக்கு விண்ணப்ப மாகத் தந்தார்களானால் அதன்மீது நடவடிக்கை எடுக்க வாய்ப் பாக இருக்கும். இந்த அறிக்கையை வைத்துக் கொள்ளுங்கள். இதில் ஒரு அதிகாரிக்குடி தரப்படவில்லை என்று சொல்லப்படு கிறது. அவர்கள், அதிகாரிகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட் டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். யார் யாருக்கு என்று சொல்லுங்கள். 'நிலச்சுவாந்தார்கள் 2 பேர்களுக்கு' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 2 பேருக்கு மேல் இருந்தால் யார் யார் என்று சொல்லுங்கள். அப்படிச் சொன்னால் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும். பொதுவாக எடுத் துச் சொன்னால் பொதுவாகத்தான் பதில் சொல்லுவார்கள். இந்த அறிக்கையை வைத்துக்கொண்டு, அவர்களிடமுள்ள குறிப்பு களை வைத்துக்கொண்டு, விண்ணப்பம் கொடுத்தால் அதன்மீது நடவடிக்கை எடுத்து, உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க வாய்ப்பாக இருக்கும்.

(ஆ) திருமங்கலத்தில் நீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதில் தாமதம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, "திருமங்கலம் நகருக்கு சோழவந்தானிலிருந்து வைகைக் குடிநீர் கொண்டு வந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகி யும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இன்னும் கட்டாததால், தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியில் பொது மக்களுக்குத் தேவையான அளவு குடிநீர் கிடைக்காமல் அப்பகுதியில் கடுமை யான குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற் குக் கொண்டு வருகிறேன்.

1987 மார்ச் 26]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருமங்கலம் நகருக்காக குடிநீர்த் திட்டத்தின் கீழ் 7 லட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் பணி பற்றிய வேலை உத்தரவு ஒப்பந்தக்காரருக்கு 7—11—1985-ல் வழங்கப்பட்டது. நீர்த் தேக்கத் தொட்டி வேலை ஓரளவு முடிக்கப்பட்டு, மீதி வேலைகளை முடிப்பதில் நீண்ட தாமதம் காணப்பட்டது. எனவே மீண்டும் 27—10—1986-ல் ரத்து செய்யப்பட்டது.

திரு. பல்தசார் என்கிற ஒப்பந்தக்காரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே இப்போது குடிநீர் சுமார் 8.1 இலட்சம் லிட்டர் தினமும் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் நகரத்திலே பெரும்பாலும் நிலத்தடி நீராக சுண்ணாம்பு கலந்த நீராகவும், சவுடு நிறைந்த நீராகவும் இருக்கின்ற காரணத்தினாலேதான் நம்முடைய பெரு முயற்சியினாலே சற்றேறக்குறைய ரூ. 9 லட்சம் செலவிலே சோழ வந்தானிலிருந்து குடிநீர் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் சொன்ன தகவலிலே மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டுகின்ற பணி ஓரளவுக்கு முடிக்கப்பட நீண்ட காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று அவரே ஏற்றுக் கொள் கிறார்கள். நான் உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்குக் கொடுத்த அறிக்கையிலே 1—11—1984லே இருந்தே முன்னோடி குடிநீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக அவர்களே ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். 1—11—1984லே குடிநீர் விநி யோகிக்கப்பட்ட பின்னர் ஓராண்டுக்குப் பின்னாலே 7—11—1985 லேதான் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுகின்ற பணி தொடங்கப்பட்டிருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், திருமணமாகி கணவன் மனைவியாக இருக்கின்றவர் களுக்கு மணமக்களாக இருக்கும் காலத்திலே செய்ய வேண்டிய நிச்சயதார்த்தம் திருமணம் ஆகி பல ஆண்டுகளுக்குப் பின்னாலே நடைபெறுவதுபோல இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்விக்கு வர வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: கேள்விக்குத்தான் வருகிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி மட்டும் கேளுங்கள்.

திரு. என்.எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ரொம்ப முக்கியமான விஷயம். "It is not a joke at all" பல ஆண்டுகளுக்கு முன்னாலே தொடங்கப்பட்டிருக்க வேண்டிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டக் கால தாமதம் ஏற்படக் காரணம் என்ன? நீண்ட கால தாமதம் ஏற்பட காரணம் என்ன? அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்படாத காரணத்தினாலேயே பொது மக்களுக்கு, தேவையான அளவுக்குத் தண்ணீரைக் கொடுக்க முடியவில்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். ஆகவே உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நடந்தவை நடந்தவையாக இருந்தாலும்கூட இப்போது இருக்கின்ற அறிக்கையிலே 7-வது மாதத்திற்குள்ளே கட்டி முடிக்கப்படும் என்று சொல்கின்ற காரணத்தினாலே, இதற்கு முன்னாலே என்னால் கொண்டு வரப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே சென்ற ஆண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்படும் என்று அப்போது இருந்த குடிநீர் வாரியத்துறை அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்துவிட்டு பல காலம் ஆன காரணத்தினாலேயும், இப்போது குறிப்பிட்டுள்ள காலத்திற்குள்ளேயாவது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்படுமா என்பதை உங்கள் மூலமாக திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிச்சயதார்த்தம் என்று வைத்துக்கொள்வது அவர்களது வசதியைப் பொறுத்ததே தவிர வேறல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்யாணத்திற்கு முன்னாலேதான் வைத்துக் கொள்வார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்யாணத்திற்கு முன்னாலேயும் வைக்கலாம், பின்னாலேயும் வைக்கலாம். அது குடும்ப விவகாரம். தனியாக வந்தால் சொல்கிறேன் எப்படி என்று.

1987 மார்ச் 26]

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாலே நான் வைப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில குடும்பங்களிலே பின்னாலே வைப்பது உண்டு. வேண்டுமென்றால் என்னிடம் நேராக வந்தால் உங்களுக்கு சொல்கிறேன். தண்ணீர் எப்படி வருகிறது என்பதுதான் பிரச்சினை. 8.1 லட்சம் லிட்டர் தண்ணீர் தந்து கொண்டிருக்கிறோம். அது மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி வழியாக வந்தாலும் தண்ணீர் தான். தரை மூலமாக வந்தாலும் தண்ணீர்தான். இந்த ஏழாம் மாதத்திலே உங்களுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டி நானே வந்து திறந்து வைக்கிறேன்.

(இ) சைதாப்பேட்டை மருத்துவமனையில் போதிய பணியாளர்கள் இன்மை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை அரசு பொது மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிரிவு, இருதய பரிசோதனைப் பிரிவு துவங்க கருவிகள் மற்றும் கட்டிடங்கள் அமைக்கப்பட்டும் போதிய பணியாளர்கள் நியமனம் செய்யாத காரணத்தினால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்படும் அவல நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

14—2—1983ல் சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்தினரால் வழங்கப்படும் நிதியைக் கொண்டு சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் ஒரு எக்ஸ்ரே பிரிவு துவங்குவதற்குத் தேவையான கருவிகள் வழங்குவதற்கு அரசு அனுமதி அளித்தது. அவ்வாறே அச்சங்கத்தினால் வழங்கப்பட்ட நிதியைக்கொண்டு எக்ஸ்ரே பிரிவிற்கான தேவையான கருவிகள் வாங்கப்பட்டன. எனவே இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு, இருதயப் பரி